**2.6 சொத்துவரி சீராய்வு – நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சொத்துவரி சீராய்வு – சில தெளிவுரைகள் –வெளியிடப்படுகிறது.**

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

அரசாணை(நிலை) எண். 110 நாள்: 23.06.2008.

1. அரசாணை (நிலை) எண். 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.11.2007.
2. அரசு கடிதம் எண். 38279/தேர் /2006–2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 01.02.2008.
3. நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண். 630 12/ஆர். 1/2007, நாள் 11.02.2008.

**ஆணை**

பார்வை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில், மாநிலத்திலுள்ள அனைத்து பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் அடுத்த சொத்தவரி பொது சீராய்வு 01.04.2008 முதல் தொடங்கவுள்ள அரையாண்டில் மேற்கொள்ளப்படலாம் எனவும், இச்சீராய்வு தற்போது நடைமுறையிலுள்ள சட்டப் பிரிவுகள், விதிகள் மற்றும் இச்சீராய்வு குறித்து நகராட்சி நிர்வாக ஆணையரால் வெளியிடப்படவுள்ள வழிகாட்டுதல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் எனவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகிய அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரே மாதிரியான நெறிமுறைகள் (uniform guidlines) கடைபிடிக்கப்டுவதை உறுதி செய்யும் பொருட்டு, துறைத் தலைவர்களைக் கலந்தாலோசித்த பின்பு, வழிகாட்டுதல் நெறிமுறைகள் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்டுள்ள அரசு கடிதத்தில் அனைத்து துறைத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

3. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், மக்களுக்கான குடிநீர், வடிகால், சாலை போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருவதற்கென பெரும் செலவில் பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வரும் இவ்வேளையில், நகர்புர உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருவாயை உயர்த்தி அமைக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளன. சொந்த வருவாயின் முக்கிய கூறான சொத்துவரியின் மூலமான வருவாயை பொது சீராய்வின் மூலமாக பெருக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே வேளையில் குடியிருப்புகள் உள்ளிட்ட சொத்துக்களின் உரிமையாளர்கள் சிரமத்திற்குள்ளாகலாம் என்பதை கருத்தில் கொண்டு, சொத்துவரி உயர்வு, தற்போதுள்ள அரையாண்டு சொத்துவரியில், குடியிருப்புக் கட்டிடங்களுக்கு 25 சதவீதத்திற்கு மிகாமலும், தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும், வணிகக் கட்டிடங்களுக்கு 150 சதவீதத்திற்கு மிகாமலும் அமைந்திருக்கலாம் என வழிகாட்டுதல் நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. எனினும், சொத்துவரி பொது சீராய்வு குறித்து பெறப்பட்டுள்ள கோரிக்கைகள் குறித்து அரசு கவனமாக பரிசீலித்தது. இதன் அடிப்படையில் கீழ்க்காணும் தெளிவுரை வழங்கப்படுகிறது.

‘‘ நகர்புற உள்ளாட்சி அமைப்புகள், மக்களுக்கான குடிநீர், வடிகால், சாலை போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகனை ஏற்படுத்தி தருவதற்கென பெரும் செலவில் பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வரும் இவ்வேளையில், நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருவாயை உயர்த்தி அமைக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளன. சொந்த வருவாயின் முக்கிய கூறான சொத்துவரியின் மூலமான வருவாயை பொது சீராய்வின் மூலமாக பெருக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே வேளையில் குடியிருப்புகள் உள்ளிட்ட சொத்துக்களின் உரிமையாளர்கள் சிரமத்திற்குள்ளாகலாம் என்பதை கருத்தில் கொண்டு, சொத்துவரி உயர்வு, தற்போதுள்ள அரையாண்டு சொத்துவரியில், குடியிருப்புக் கட்டிடங்களுக்கு 25 சதவீதத்திற்கு மிகாமலும், தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும், வணிகக் கட்டிடங்களுக்கு 150 சதவீதத்திற்கு மிகாமலும் அமைந்திருக்கலாம் என வழிகாட்டுதல் நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உயர்வு சதவீதத்தை அந்தந்த நகர்புற உள்ளாட்சி மன்றமே, அதன் வருவாய் மற்றும் செலவினங்களைக் கருத்தில் கொண்டு அரசு நிர்ணயித்துள்ள உயர்வு சதவீதத்திற்குள் இருக்கும்படியாக தீர்மானித்துக் கொள்ளலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே. தீனபந்து**
அரசு செயலாளர்